பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

When only The best is Good Enough



Buy
Solide Pumps

# உதயன்

விலை
ரூபா 3/50

தரமானதே சிறந்தது என்றால்



சோலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 5 சுக்கில ஞூ தை மீ 30 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 15 (12-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 7

# கருணாநிதியுடன் பேச விடுதலைப் புலிகள் குழு இன்று சென்னை பயணம்

## சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்ற நாளையே கொழும்பு திரும்புவார்கள்

கொழும்பு, பெப். 12

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவதற்காக, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் திரு. அன்டன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், திரு. லோறன்ஸ் ஆகியோர் அடங்கிய குழு இன்று சென்னை பயணமாகின்றது.

இன்று சென்னை செல்லும் இந்தத் தூதுக்குழுவினர் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நாளைய தினமே — உடனடியாக — கொழும்பு திரும்புவார்கள்.

— இத்தகவலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி உதயனுக்கு நேற்று இரவு தெரிவித்தார்.

எனினும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு சென்னை புறப்படுவதற்கான வீஸா அனுமதி, நேற்றிரவு வரை பெற்றுக்கொள்ளப்படவில்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கொழும்புக்கு வெளியே ஓரிடத்தில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு இன்று அதிகாலையில் கொழும்புக்கு வந்து சேருவர் என்றும் —

(6-ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர் அழைத்தது ஏன்?

சிறப்புச் செய்தி

கொழும்பு, பெப். 12

மற்றைய தமிழ்க் குழுக்களுடன் இணங்கிப்போகுமாறு வற்புறுத்தவே விடுதலைப் புலிகள் குழுவைக் கலைஞர் மு. கருணாநிதி தமிழகத்துக்கு அழைத்திருக்கிறார் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டிருக்கும் தமிழ்க் குழுக்கள் தற்போது இந்தியப் படையினர் வட, கிழக்கில் உள்ள இடங்களில் அவர்களுடன் தங்கியிருக்கின்றனர்.

இந்தியப் படையினர் இங்கிருந்து முற்றாக வெளியேறுவதற்கு முன்னர் அக்குழுக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரசம் ஏற்படாவிட்டால் இந்தியப் படை வெளியேறும் போது இக்குழுக்கள் ஆயுதங்களுடன் தமிழகம் போய் இறங்கிவிடும்.

அப்படிப் போய்ச் சேர்ந்தால் அது தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலைமையை மோசமாகப் பாதிக்கும் என கலைஞர் அஞ்சுகின்றார்.

எனவே இந்தியப் படை வெளியேறும்போது மற்றைய தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து வடக்கு, கிழக்கில் தங்கியிருக்கக்கூடிய ஒரு சமரச நிலையை ஏற்படுத்த கலைஞர் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் கலைஞரை இன்று அல்லது நாளை காலையில் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் குழு சந்திக்கும்போது, மற்றைய தமிழ்க் குழுக்களுடன் சமரசத்துக்கு வருமாறு கலைஞர் அவர்களைக் கேட்டால் —

''எந்தத் தமிழ் குழுவும் ஆயுதங்கள் இல்லாமல் வடக்கு, கிழக்கில் அரசியல் நடத்த அனுமதிப்போம். தற்போது ஆயுதம் தாங்கியிருக்கும் மற்றைய குழுக்கள் ஆயுதங்களை இந்தியப் படையிடம் அல்லது எங்களிடம் முற்றாக ஒப்படைத்து விட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சார்க் மாநாடு; எதிர்க்கும் முயற்சியில் இந்தியா

கொழும்பு, பெப். 12

சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாடு இலங்கையில் நடைபெறுவதைத் தடுக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாண்டு இந்த உச்சி மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்குப் பதிலாக மாலைதீவில் நடத்துவதற்கு ஆதரவு திரட்டும் வேலைகளில் இந்தியா இறங்கியிருப்பதாகவும் அதிகார வட்டாரங்கள் கூறுகின்றன.

மாலைதீவு சுதந்திரம்பெற்று இவ்வாண்டு 25 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அதனைக் கொண்டாடுமுகமாக சார்க் உச்சி மாநாட்டை தனது நாட்டில் இவ்வாண்டு நடத்த வேண்டும் என்று மாலைதீவு அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இதற்கு இந்தியாவும்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## 228 குடும்பங்களுக்கு இவ்வாரம் தலா ரூ. 50 ஆயிரம் நிவாரணம்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 228 குடும்பங்களுக்கு கடும் பாதிப்புக்குள்ளான நிவாரணத் தொகையாக தலா 50 ஆயிரம் ரூபா இவ்வாரம் வழங்கப்படவிருக்கிறது;

இக்குடும்பங்களுக்கான காசோலை யாழ் அரசாங்க செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று பதில் அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (க-3)

### மைக்டைஸன் தோல்வி!

டோக்கியோ பெப். 12

உலக அதிபார குத்துச் சண்டை வீரர் மைக்டைஸன் எதிர்பாராதவிதமாக நேற்று ஜிம் டக்ளஸ் என்பவரிடம் தோற்றுப்போனார்.

பங்குபற்றிய 37 போட்டிகளிலும் வென்ற டைஸன், 38 ஆவது போட்டியில் பத்தாவது சுற்றில் டக்ளஸால் தோற்கடிக்கப்பட்டார்' (எ)

### மேலும் மூவர் சிக்கினர்

குருநகர், பெப் 12

மேலும் மூன்று போதைப் பொருள் பாவனையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் தண்டிக்கப்பட்டனர்.

மொட்டை அடித்து மீசை அரைப் பகுதி நீக்கப்பட்ட மூவரையும் நேற்று முன் தினம் இரவு குருநகர் தொடர் மாடி முற்றவெளிக்கு விடுதலைப் புலிகள்இயக்கப் போராளிகள் கொண்டு வந்தனர்.

இவர்களில் ஒருவரை மனைவி மீட்டுச் சென்றார். (இ-51)

### முச்சந்தி முரளி



அப்ப, சார்க் சறுக்கிக் கொண்டு போகும் போலை இருக்கு....!

### விபத்து

யாழ்ப்பாணம், பெப். 12

நேற்று பிற்பகல் 5 மணியளவில் ஆனைப்பந்தி நாவலர் வீதி, பருத்தித்துறை வீதிச் சந்தியில் இடம்பெற்ற வான்–சைக்கிள் விபத்தில் இரு பெண்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் செல்வி திரேசா (வயது 26) அரியாலை, ஜோதினி இமானுவேல் (வயது 14) நல்லூர் ஆகியோராவர். (உ-9)

# 22 விடுதலைப் புலிகள் கடலில் மூழ்கி மரணம்!

## திருகோணமலையில் சம்பவம்

கொழும்பு, பெப். 12

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 22 பேர் விபத்தில் மரணமானார்கள்.

இரு படகுகள் கடலில் கவிழ்ந்ததால் விபத்து ஏற்பட்டது.

திருகோணமலையிலுள்ள ஜமாலியாவில் ஈ. என். டி. எல். எவ். முகாம் ஒன்றை வெற்றிகரமாகத் தாக்கிவிட்டு படகுகளில் திரும்பி வருகையிலேயே படகுகள் விபத்துக்குள்ளானதாக விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு திருகோணமலை கடற்பகுதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல் நடவடிக்கையில் 36 விடுதலைப் புலிகள் போராளிகள் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

14 விடுதலைப் புலிகள் போராளிகள் பாதுகாப்பாக நீந்திக் கரை சேர்ந்ததாகத் தெரியவந்தது.

மரணமான 22 பேரில் 3 மேஜர்களும், 5 சப்டன்களும், 2 லெப்டினன்ட்டுகளும் 3 இரண்டாவது லெப்டினன்ட்டுகளும் அடங்குவர்..

மரணமான போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர அஞ்சலியைச் செலு

(6-ஆம் பக்கம் பார்க்க)

# தடுப்பு முகாமிலுள்ள 700 பேரும் இம்மாத இறுதிக்குள் விடுதலை

## இந்தியப்படை தளபதி வெளியிட்ட உறுதிமொழி

யாழ்ப்பாணம், பெப்.12

இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 700 பேரும் இம் மாத இறுதிக்குள் விடுவிக்கப்பட உள்ளனர்.

இவ்வாறு இந்திய அமைதிப்படையின் வடபகுதிக்குப் பொறுப்பான தளபதி மேஜர் ஜெனரல் ஆர். என். பல்வா நேற்றுத் தெரிவித்தார்.

கரவெட்டி, யாக்கரு அமைதிப்படை முகாமில் வைத்து தம்மைச் சந்தித்த வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரஜைகள் குழுப் பிரதிநிதிகளிடமே அவர் இத் தகவலைத் தெரிவித்தார்.

இதுவரை விடுதலை செய்யப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் தொண்டமனாறு அமைதிப்படை முகாமில் வைத்து விடுவிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைதிகள் விடுவிப்பின் போது போதியமுன்னறிவித்தல் கொடுக்கப்படுவதில்லை என்றும் விடுவிக்கப்படுவோரின் பெயர், விவரம் முன்னரே

(6-ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடனான உறவை சீர்படுத்த விரும்புகிறோம்

## ஈரோஸ் பாலகுமார் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப். 12

''தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் முதன்மைச் சக்தி என்ற வகையில் விடுதலைப் புலிகளுடனான உறவைச் சீர்படுத்த விரும்புகிறோம். வேறுபாடுகள் இருந்த போதும், அவர்களுடன் இணக்கமாகச் செயற்பட விரும்புகிறோம். இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.''

ஈரோஸ் செயலதிபர் திரு. வே. பாலகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய நிலை குறித்து திரு. பாலகுமார் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 5ஆம் திகதி தொடக்கம் மூன்று நாட்கள் எமது இயக்கப் பொதுக்குழுக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் பல

(6-ஆம் பக்கம் பார்க்க)

# மண்டேலா விடுதலை!

கேப்டவுன், பெப். 12

கால்நூற்றாண்டுக்கு மேலாகச் சிறைவாசம் அனுபவித்த பின்னர் நேற்று மாலை 7-30 அளவில் விடுதலை செய்யப்பட்ட ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்ஸன் மண்டேலாவுக்கு உலக வீரருக்கு (மண்டல நாயகன்) உரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலக நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான பத்திரிகையாளர்கள், டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் மண்டேலா காவலில் வைக்கப்பட்டிருந்த சிறைக்கு வெளியே குழுமியிருந்தனர்.

சுதந்திர புருஷராக மண்டேலா வெளியே வரும்போது அவரின் முகத்தோற்றத்தை உலக மக்களுக்குக் காண்பிப்பதற்காக பி.பி.சி. டெலிவிஷன் நேரடி ஒளிபரப்பை நடத்தியது.

உலக நாடுகளில் நெல்சன் மண்டேலா என்பதே பேச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், பெப் 12

நேற்றுக்காலையில் வல்வெட்டித்துறையில்மினி வான் ஒன்றிலிருந்து விழுந்து இளம் பெண் ஒருவர் மரணமானார்.

மரணமானவர் அமிர்தலிங்கம் புஷ்பமலர் (வயது 21) என அடையாளம் காணப்பட்டது. (உ-9)

# 108 பேர்களை புலிகள் விடுவிப்பு

## நாளை பொறுப்பேற்கப் பெற்றோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப் 12

தமிழீழ விடுதலைப் புலிகளினால் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 108 இளைஞர்கள் நாளை செவ்வாய்க்கிழமை (13-2-90) பிற்பகல் மூன்று மணிக்கு விடுதலை செய்யப்படுவர்.

நல்லூரில் தியாகி திலீபன் நினைவுத்தூபி முன்னால் வைத்து விடுவிக்கப்படவுள்ள 108 பேரும் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டவர்களும் அவர்களிடம் சரண் அடைந்தவர்களுமாவர்.

விடுதலை செய்யப்பட இருக்கும் இளைஞர்களை வந்து பொறுப்பேற்குமாறு அவர்களின் பெற்றோர்களைக் கேட்டுக்கொள்வதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

நாளை விடுதலை செய்யப்பட உள்ளவர்களின் பெயர், விவரம் வருமாறு:—

1. நடராஜா–சுதாகுமார், (மீசாலை வடக்கு, கொடிகாமம்( 2. இரத்தினம்–கந்தசாமி (மந்துவில்) 3. சுப்பிரமணியம்–மகேந்திரகுமார் (உரும்பராய் கிழக்கு) 4. நாகராஜா—சந்திரசேகரன், (8/3, பெருமாள் கோவிலடி, யாழ்.) 5. சிங்கக்கொடி–லங்கேஸ், (குருநகர் தொடர் மாடி, யாழ்.) 6. சிவராசா–பற்குணராசா, (தொல்புரம்–மூளாய்), 7. ஜேமிஸ்–ஜீவநாதன் (துண்டி, கொழும்புத் துறை) 8 கிட்சான்–சுயங்கரன் (தையிட்டி, காங்கேசன்

(6–ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

12 — 02 — 1990

திங்கட்கிழமை தை — 30

சுபநேரம்:
12 . 34 முதல் 02 . 04 வரை

ராகுகாலம்:
8 . 04 முதல் 09. 34 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

# காங்கேசன் வங்கியில் பணப்புழக்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 12

காங்கேசன்துறை இலங்கை வங்கி கிளைக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டதையடுத்து அங்கு கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரத்தில் உள்ள வங்கிகளுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதால் அவற்றில் பணப்புழக்கம் இடம் பெறுகிறது.

ஆனால் சுன்னாகம், மானிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைக

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி T. V. 20/60 கலர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு சுதா வைன்டிங் வேர்க்ஸ், மல்லிகா ஹோட்டல் அருகில் மானிப்பாய். (2284)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

R. I. R. தனிச் சிவப்பு, கறுப்பு சேவல் பேடு (பிலிபத்) கறுப்புப்புள்ளிசேவல் (Dekalb) பிறவுண் பேடு சேவல் (Cobb) புரொயிலர்குஞ்சுகள்குறைந்த விலைக்கு (14.2.90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல: 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத் திற்கு அருகில்) (2462)

### ஆங்கில புத்தகம்

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க, பரீட்சைகளுக்குத் தோன்ற வீட்டில் இருந்தபடியே மிகசுலபமாக கற்கக்கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகம் தான் Basic Grammar and Spoekn Practical வாங்கியோர் பலராலும் பாராட்டப் பெற்றது கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1960)

### படப்பிடிப்பாளர் தேவை

புகைப்படத் துறையில் நன்கு அனுபவம் உள்ளவர் உடன் தொடர்பு கொள்ளவும் ஸ்ருடியோ ஜனனி, சாவகச்சேரி. (2477)

### தேவை

தையல் வேலை தெரிந்த பெண்கள் உடன் தேவை. 640, ஆஸ்பத்திரி வீதி, (காப்புறுதி கூட்டுத்தாபனம் முன்பாக) யாழ்ப்பாணம். (1969)

பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைகள் தைத்துக் கொடுக்கப்படும். அத்துடன் தையல் வேலையில் அனுபவம், கட்டிங் தெரிந்த பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். S.T.L. ரெயிலறிங் இல: 3, நவீன சந்தை மேல் மாடி, திருநெல்வேலி. 2483

### மணமகள் தேவை

38 வயது இந்து வேளாள குல சுயதொழில் பார்க்கும் ஆணுக்கு 30 வயதுக்குட்பட்ட ஓர் அளவு அழகுள்ள மணப்பெண் தேவை. மணப்பெண் வெளிநாடு செல்லவேண்டியும் வரும். ஓர் அளவு சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. பெண்ணின் படத்துடனும் குறிப்புடனும் தொடர்பு கொள்ளவும். C/o 97, உதயன். (1963)

### தவறிவிட்டது

அப்புத்துரை சத்தியசீலன் ஆகிய எனது வாகன சாரதி புத்தகம் தாவடிச்சந்திக்கும் ஊரெழுவிற்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர்கள் சுன்னாகம் நியூசன்யோவிலோ அல்லது உதயன் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (2500)

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும். தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ள ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### Spoken English

புதிய தொடர் வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 6,7-30 மணி ஆரம்பம் 12-2-90 S. R. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (2234)

### ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி

சனி ஞாயிறு வகுப்புக்கள் G. S. Q (Bio) G. S. Q. (maths) Home Science Diploma விரைவில் ஆரம்பமாகவுள்ளன. சேர விரும்புவோர் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அதிபர் The College of higher Studies Jaffna. (1965)

### Wanted Trainee Cook

wanted Trainee cook. Call over Personalny between 9.00- 10.00A.m. before 15th Feb. europe China Hotel Second cross Street. Jaffna (1968)

### கல்வி

Scholarship 1990 ஆண்டு 5 புலமைப்பரீட்சைக்கான கணிதம், தமிழ் கற்பிக்கப்படும். தனிப்பட்ட கவனிப்பு பல வருட அநுபவமுள்ள ஆசிரியர் 85 சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (2494)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. S. T. N. நாகரட்ணம் அவர்கள்

(சுன்னாகம் S. T. நாகலிங்கம் அன்கோ உரிமையாளரும் முன்னாள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவருமாவார்)

| தோற்றம்: | மறைவு: | அமரர் திதி: |
|---|---|---|
| 19 – 02 – 1927 | 24 – 02 – 1989 | 13 – 02 – 1990 |

குடும்பத்தின் ஒளிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே! கருணையின் பெருங்கடலே! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயரவைத்த உத்தமரே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொள்ளச் சென்றீரோ! எம் குடும்பக் குலவிளக்கே! எம்மைவிட்டு ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு நீண்டு செல்லுதையா! உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து உற்றார், உறவினர்கள், அயலார், நண்பர்கள், தோழர்கள் அனைவருக்கும் உதவி செய்தீர் அனைவரும் உம்மைத் தெய்வம் எனப்போற்றுகின்றனர்.

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்:

குறிப்பு:- உற்றார், உறவினர்கள், நண்பர்கள், தோழர்கள் அனைவரும் அன்னாரின் திதிக்கிரியையில் பங்குகொண்டு, மதிய போசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

இங்ஙனம்
S. T. N. நாகரட்ணம் குடும்பத்தினர்.

S. T. N. நாகரட்ணம் வீதி,
சுன்னாகம்.

(2272)

## WANTED IMMEDIATELY

### Registered Nurses and Midwives

Applications are invited from Registered Nurses and Mid wives

Retired persons can also apply.
Salary Negotiable.

Apply before 28. 02. 90
TO:
THE MEDICAL SUPERINTENDENT
Green Memorial Hospital, Manipay.

(C/3791)

## WANTED

Engineer Architect & Draugtsman withMin. 5, Years Experience Required Urgently For Hotel Project at Marshal Island.

PLEASE CONTACT:
ENG. CANAGARAJAH, MCLEOD HOSPITAL, INUVIL after 4.30 p.m

(2501)

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பணிமனை யாழ்ப்பாணம்.

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி காலை 10.00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா. 300,000/- க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய மறுநாள் 28 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமூகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக் கட்டிட வேலை செய்ய விரும்புவோர் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி காலை 10.30 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலிருந்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திருப்பித்தரக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 350/- தும் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா. 50/- தும் காசுக்கட்டளை மூலம் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கிராமோதய சுகாதார நிலையம்

| யாழ்ப்பாண மாவட்டம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு | — 6 கட்டிடங்கள் இடம் |
|---|---|
| காங்கேசன்துறை | 1. குளமங்கால் - மல்லாகம் |
| | 2. ஈவினை - புன்னாலைக்கட்டுவன் |
| | 3. அளவட்டி வடக்கு |
| மானிப்பாய் | 4. சாவல்கட்டு - ஆனைக்கோட்டை |
| கோப்பாய் | 5. நாவலடி - அரியாலை |
| சாவகச்சேரி | 6. உசன் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் "சுகாதாரப் பகுதி கட்டிட வேலை" என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப் பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். அல்லது இப் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையின் 5% ஒப்பந்தத்தின் படி வேலையை திருப்திகரமாகச் செய்து முடிக்க பிணைப் பணமாக யாழ்ப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைகளும், அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச்சபைத் தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்,

08. 02. 1990.

(C/3372)

## 90 A/L விஞ்ஞான மாணவர்களுக்கு

★ மொத்தல் ★ கணத்தாக்கு ★ இழுவை

ஆரம்பம்:- 12 - 02 - 1990 திங்கள் 3 p.m.
Mon & Wed & Fri 3 — 5 p.m.
MR. GANESHAN B. Sc. (Hons)
3rd Cross Street, JAFFNA.

[சி-3837]

## DIPLOMA IN NURSING

### தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உயர்கல்விக்குகந்ததாக

- பிரபல தனியார் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி நெறி
- பாமஸி ஆங்கில வகுப்புக்கள்

உங்கள் பதிவுகட்கு

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14, St. Peters Lane
Hospital Road,
JAFFNA

[C-3819]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
### விஜயரத்தினம் தேவகுமார்
[அறிவாளி]

| அவதரிப்பு: | அழிப்பு: |
|---|---|
| 27 – 11 – 1970 | 30 – 12 – 1989 |

(யாழ் / சென் ஜோன்ஸ் கல்லூரி உயர்தரக் கணித விஞ்ஞான மாணவன்)

தெய்வக் குழந்தையே, தேவகுமாரா!
அன்புக் கடலே, அறிவொளியே!
பொது நலவாதியே, சமுதாய சீர்திருத்த சிற்பியே!
அநியாயமாக, அறியாமையால், அழிக்கப்பட்டாயே!
மனம் ஆற முடியாது மண்ணில் புரளுகின்றோம்,
கண்ணீர் சிந்துகின்றோம்.

தம்பி! யாழ் / வீதியில் சிந்திய உன் செந்நீரெல்லாம்
தங்கத் தமிழ்ச் செடிக்குத் தண்ணீராம்!

அந்தியேட்டி:- 11 - 02 - 90 ஞாயிற்றுக்கிழமை காலை வேலணை வெள்ளைக் கடற்கரையில் நடைபெற்றது.

வீட்டுக்கிருத்தியம்:- 12 - 02 - 90 திங்கட்கிழமை இன்று யாழ் / அரசடி வீதி இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்ச்சியில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர் அனைவரையும் வேண்டுகிறோம்.

எமது அன்புச் செல்வத்தின் அகால மரணமறிந்து எங்களின் ஆழ்ந்த துன்பத்தில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியோர்க்கும் எங்கள் அன்பு கனிந்த நன்றி:

திரு. திருமதி இ. விஜயரத்தினம்,
ஸ்ரீ விஜயலட்சுமி, வி. விஜயகலா } சகோதரிகள்
பா. ஸ்ரீகெங்கன் - மைத்துனன்

71/9 A, அரசடி வீதி.
யாழ்ப்பாணம்.

[2283]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகிறது
NEW GENERATION ENGLISH

1990 மார்ச் மாதத்திற்குரிய 5, முழுமையான புதிய G.C.E. (O/L) ஆங்கிலப் பயிற்சி I & II விடைகளுடன் அடங்கியது விரிவான படங்களுடன் நூறு பக்கங்களுக்கு மேல் கொண்ட ஒரு அரிய நூல்.

ஆக்கியோன்: தெய்வதவபாலன்

கிடைக்கும் இடம்:
1. பூபாலசிங்கம் புத்தகசாலை
2. சுப்பிரமணியம் புத்தகசாலை
3. சிறிலங்கா புத்தகசாலை

(2499)



உடனடி
## வேலை வாய்ப்புக்கள்

வடபகுதியில் பிரபல்யமான நிறுவனமொன்றில் பின்வரும் வேலைவாய்ப்புகள் உள்ளன. தகுதியும் ஆர்வமும் உடையோர் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

1. **எழுதுவினைஞர்**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த 25ந்து வயதுக்குட்பட்ட, யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் ஆண்கள் விரும்பத்தக்கது.
2. **விவசாய உதவியாளர்**
   க. பொ. த. (உ/த) தாவரவியல் பிரிவில் சித்தியடைந்த 25 வயதுக்குட்பட்ட பருத்தித்துறை, பளை, சாவகச்சேரி பகுதியில் வசிப்போர் விரும்பத்தக்கது.
3. **பத்திரிகையாளர் [பயிலுனர்]**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த பத்திரிகைத் துறையில் ஆர்வமுடைய இளைஞர்கள் விரும்பத்தக்கது.
4. **பத்திரிகைச் செய்தியாளர்**
   க. பொ. த. (உ/த) சித்தியடைந்த பத்திரிகைத் துறையில் ஆர்வமுடைய கொழும்பில் வசிப்போர் விரும்பத்தக்கது.

● கையினால் எழுதப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 22-2-90ம் திகதிக்கிடையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டிய முகவரி:

**Arun Marketing & Advertising**
15, 2nd Lane,
Power House Road,
JAFFNA.

[சி-3375]


# தென் ஆபிரிக்காவில் கறுப்பின ஆட்சி ஏற்படுத்த மண்டேலா உறுதி!

## விடுதலையாவதற்கு முன் அளித்த பேட்டி

கேப்டவுண், பெப் 11

பெரும்பான்மையான கறுப்பின மக்களின் ஆட்சி தென் ஆபிரிக்காவில் ஏற்படவேண்டும். அதற்கு வழி செய்யும் விதத்தில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்.

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா விடுதலையாவதற்கு முன்னர் தேசியப் பத்திரிகை நிறுவனத்திற்கு அளித்த பேட்டி ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. மண்டேலா மேலும் சொன்னதாவது;

தென் ஆபிரிக்க அரசியல் சட்டத்தில் இருந்து பிரிக்க முடியாத அரசியல் உரிமைகளை வெள்ளை இனத்தவருக்கு வழங்க இடமளிக்க முடியாது.

பேச்சுக்களை நடத்துவதாகக்கூறி வெள்ளை இனத்தவரின் ஆட்சி தொடருவதற்கு நான் இடமளிக்கமாட்டேன்.

இப்படி மண்டேலா சொன்னார்:

தென் ஆபிரிக்க ஜனாதிபதி டிகிளேர்க் பேசுகையில்,

புதிய அத்தியாயம் திறக்கப்பட்டுள்ளது. அமைதித் தீர்வுகாண மண்டேலா உட்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆபிரிக்கப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணக்கூடியவர்கள் நாம் என்பதை உலகிற்குக் காட்ட வேண்டும்—

இப்படி ஜனாதிபதி சொன்னார். (எ)

## வெள்ளையர் ஆத்திரம்

ஜோஹன்னஸ்பேர்க், பெப் 11

மண்டேலாவை விடுதலை செய்வதை எதிர்த்து தீவிர வெள்ளை இனத்தவர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜனாதிபதி டிகிளேர்க், வெள்ளை இனத்தவருக்குத் துரோகம் செய்துவிட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

மண்டேலாவைத் தூக்கில் போடவேண்டும் என்றும் கோஷம் எழுப்பப்பட்டது.

## றேகன் சாட்சியம்

வாஷிங்டன், பெப் 11

ஈரான் கேட் ஊழல் விவகாரம் தொடர்பாக வீடியோ மூலம்சாட்சியமளிக்கஅமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி றேகன்இணங்கியிருக்கின்றார்

ஈரான் கேட் ஊழல் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றில்சாட்சியமளிக்கும்படி திரு. றேகனுக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதற்கு திரு.றேகன் முன்னர் மறுப்புத் தெரிவித்திருந்தார். (எ)

## 11/2 அடி நீள வாக்குச் சீட்டு

சென்னை, பெப். 11

பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தலில் 57 பேர் போட்டியிடுகின்றனர்.

இதனால் வாக்குச்சீட்டு 20 அங்குல நீளமும் 8 அங்குல அகலமும் கொண்டதாக இருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

## கூட்டத்தில் துப்பாக்கி சூடு!

கேப்டவுண், பெப் 11

ஜோஹன்னஸ்பேர்க் கிழக்குப்பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுக் கூட்டம் ஒன்று மண்டேலாவின் விடுதலை செய்தி கிடைத்ததும் குழம்பியது.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வெற்றி ஆரவாரம் செய்தனர். வெள்ளை இனத்தைச் சேர்ந்த பொலீஸார் அப்போது சுட்டனர். அதில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

## 'மண்டல நாயகன்' நெல்சன் மண்டேலா

நெல்சன் மண்டேலா யார்?

நெல்சன் ரோலிலாஹலா மண்டேலா, இதுதான் அவரது முழுப்பெயர்.

ஆபிரிக்கப் பழங்குடி மக்கள் நிறைந்த டிரான்ஸ்கெய் பகுதியில் கியூனு என்னும் இடத்தில் 1918ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி ஒரு சாதாரண குடிசையில் பிறந்தார் மண்டேலா.

இவரது தந்தை ஷோசா ஆபிரிக்கப் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்.

படித்துக் கொண்டிருக்கும் போதே அவருக்கு ஆடு, மாடுகளை மேய்க்கும் வேலையும் கொடுக்கப்பட்டது.

பின் உயர்நிலைப் பள்ளிக்கூடப் படிப்பை முடித்த பின்னர் 1941ஆம் ஆண்டு ஜோஹன்னஸ் பேர்க் நகருக்குச் சென்றார். அங்குள்ள தங்கச் சுரங்கம் ஒன்றில் அவருக்கு காவலாளர் வேலை கிடைத்தது. அந்த வேலையில் இருந்து கொண்டே மற்ற நேரங்



களில் அவர் சட்டப்படிப்புப் படித்து வந்தார்.

1958 ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் திகதி மண்டேலா, தற்போதைய மனைவி வின்னி மாண்டி இலேலாவை காதலித்துத் திருமணஞ் செய்தார்.

வின்னி. விட்வாட்டர்ஸ்ரண்ட் பல்கலைக் கழகத்தில் பொருளாதார அறிவியல் பட்டம் பெற்றவர்.

மண்டேலா தம்பதிகளுக்கு ஜென்னி, ஜிங்கி என்னும் 2 மகள்கள் உள்ளனர்.

1958இல் இருந்து தென்ஆபிரிக்க நிறவெறி அரசு மண்டேலாவை அடிக்கடி கைது செய்து சிறையில் அடைத்தது.

ஆனால் 1962இல் தான் மண்டேலாவுக்கு 5ஆண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றஞ் சாட்டி 12- 06- 1964இல் அவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ரொபின் தீவில் அவர் முதலில் சிறை வைக்கப்பட்டார்.

அதன் பின்னர் இன்றுதான் (11- 02- 1990) மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

அன்று 44ஆவது வயதில் சிறைபுகுந்த மண்டேலா இன்று தனது 72ஆவது வயதில் சுதந்திரப் பறவையாக வெளியே வருகின்றார்.

மண்டேலா நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்தாலும், அவரின் இலட்சியமான கறுப்பு இன மக்களின் விடுதலை வேட்கை சுதந்திர தாகத்தை அடக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

மண்டேலாவின் விடுதலைக்காக உலகமே குரல் கொடுத்தது.

வன்செயல்களுக்கு ஆதரவளிக்கமாட்டேன் என்று உறுதியளிப்பின் மண்டேலா விடுதலை செய்யப்படுவார் என்று தென் ஆபிரிக்க அரசு நிபந்தனை விதித்தது. மண்டேலா அதற்கு இணங்கவில்லை.

நிபந்தனையற்ற விடுதலையையே வேண்டும் என்று மண்டேலா நிபந்தனை விதித்தார்.

இறுதியில் நிபந்தனை அற்ற முறையில் அவரை விடுவிக்க அரசு தீர்மானித்தது.

பெரும்பான்மையான கறுப்பு இன மக்களை, வெள்ளை நிறம் என்ற காரணத்துக்காக, சிறுபான்மை வெள்ளையர்கள் ஆட்சி செய்யும் அநீதியை எதிர்த்துப் போராடிய மண்டேலாவின் விடுதலை இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆபிரிக்காவில் வாழும் கறுப்பு இன மக்களின் சுதந்திர உணர்வு வீறு கொண்டு எழ வழி சமைத்துள்ளது.

உலகில் விடுதலை விரும்பும் மக்களின் உள்ளங்களில் சிறை வைக்கப்பட்டிருக்கும் போராளி மண்டேலாவை இன்று உலகமே வரவேற்கிறது. (எ)

### தென் ஆபிரிக்கா

உத்தியோக மொழிகள்: ஆபிரிக்கானோ, ஆங்கிலம்
உத்தியோக மதம்: இல்லை
சனத்தொகை: 2 கோடி 81 லட்சத்து 39-ஆயிரம்
இன விகிதாசாரம்:-
வெள்ளையல்லாதோர்: 82%
வெள்ளையர் -18%
விஸ்தீரணம்: 4 லட்சத்து 33ஆயிரத்து 680 சதுர மைல்கள்


A/L Zoology
ஆசிரியர்;
R. ஈஸ்வரதாசன்
B.Sc. (Cey)
21, மணல்தறை லேன்,
கந்தர்மடம் - யாழ்.
14. 02. 90 புதன் ஆரம்பம்
A/L 90 3.45 pm
பொருளாதார விலங்கியல் (Economic Zoology)
4. 45 p.m
★ Revision & Paper
A/L 91
★ (Skeleton வன்கூடு) ஆரம்பமாகவுள்ளது
(சி/3834)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:- 05- 09- 1966

மறைவு:- 23- 02- 1989

**நடராசா தருமராசன்**
**(கண்ணன்)**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், தந்தை, சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

திருவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(1973)

## ● ஓராண்டு நினைவஞ்சலி ●

தாயின் மடியில் பிறப்பு: 24 – 04 – 1963

தாயக மண்ணில் இறப்பு: 02 – 12 – 1989



**முத்தையா மனோகரன்**
[பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணம்]

பிரிவால் வாடும்
உறவினர்கள், நண்பர்கள்.

[1971]

## ஓராண்டு நினைவஞ்சலி



**கிருஷ்ணபிள்ளை - கிரிதரன்**

தோற்றம்: 16 – 08 – 1968

மறைவு: 24 – 01 – 1989

ஆயிரம் கற்பனைகள் ஐயா படைத்திருந்தோம்
தூயவனே எமை நீத்துத்
தொலைதூரம் சென்றனையோ
நேயமுடன் வளர்த்த பெற்றோர் சகோதரரை
ஆய கிரிதரனே அழ வைத்து ஏகினையோ
எத்தனை நாளானாலும்
யாம் மறக்க மாட்டோமே
புத்திரனே உன் ஆத்மா சாந்தியடைந்திடுக!

● அப்பா, அம்மா, சகோதரர்கள்,
நண்பர்கள்.

[1972]

## கண்ணீர் அஞ்சலி



**D. பீலிக்ஸ்**



**M. தேவதாஸ்**

உங்கள் பிரிவால் துயருறும்:

யாழ். பல்கலைக்கழக
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

பாதுகாப்பு நலன்புரிச்சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[2261]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க நகைகளைக் கூடிய விலையில் விற்க
நீங்கள் நாட வேண்டிய
குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்
நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல. 423. [247] கே. கே. எஸ். வீதி,
சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
இராஜகோபால் சந்திரன்

# உதயன்

12 - 02 - 1990 திங்கட்கிழமை

தங்க நகைகளைக் கூடிய விலையில் விற்க
நீங்கள் நாட வேண்டிய
குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்
NEW EELAM
JEWELLERY MART
No. 423, [247] K. K. S. Road,
Sivan Kovilady, Jaffna.
[சண்முகம் தேனீர்ச்சாலைக்கு அருகாமையில்]
Prop: Rajakopal Chandran

## யாழ் வகுப்பு தொழிலாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப் 12

யாழ் வகுப்புத் தொழிலாளர் சங்க நிர்வாகிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. தனுஷுக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ் பிரதேச காரியாலயத்தில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது வகுப்புத் தொழிலாளர் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டது.

## இலங்கையில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஆனால் உச்சிமாநாடு கொழும்பில் நடத்தப்படும் என்று இலங்கை நம்பிக்கை வைத்திருப்பதுடன் அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

''இந்த ஆண்டு கொழும்பில் சார்க் உச்சிமாநாடு நடத்தப்படவில்லையானால் ஒன்று மட்டும் நிச்சயம். இந்த ஆண்டு இலங்கையைத் தவிர்ந்த வேறு எங்கு நடத்தப்படும் சார்க் உச்சி மாநாட்டிலும் இலங்கை கலந்துகொள்ள மாட்டாது — இப்படி இலங்கை அரசப்பேச்சாளர் ஒருவர் சொன்னார். (உ-எ)

## 108 பேர்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறை) 9. தேவநாயகம்—ஞானேந்திரன் (3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி) 10. நவரத்தினம் - விஜிதரன் (உரும்பராய் தெற்கு).

11. பாலசிங்கம்-சிவபாலன் (8/6, பெருமாள் கோவிலடி, யாழ்.) 12. ஜோசப்-அருமைநாதன் (சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு) 13. அப்பையா-ராஜ்குமார் (ப. ச. லேன், காங்கேசன்துறை) 14. செல்லத்துரை - ஜெயக்குமார் (குளப்பிட்டி) 15. யமால்தீன் சாவுன்கமீத் (7ஆம் குறுக்குத் தெரு, பொம்மைவெளி) 16. அரியகுட்டி-சிறிதரன் (அச்சுவேலி தெற்கு) 17. மீரான் முகதீன்-உணவஸ் (11/1, A P லேன் சோனகதெரு, யாழ்.) 18. சுடலைமுத்து-அருள்ராஜ் (304, கஸ்தூரியார் வீதி யாழ்) 19. செல்வராசா—அகிலன் (சேர் கந்தையா வீதி, யாழ்.) 20. தேவராஜா-உதயபாபு (திருநகர், கிளிநொச்சி)

21. காசிம்-ஆப்தீன் (171, புதிய சோனகதெரு, யாழ்.) 22. ரட்ணசிங்கம்-ராஜ்குமார் (கைதடி கிழக்கு) 23. திருச்செல்வம்-யூபின் ஜெயப்பிரகாசம் (2ஆம் வட்டாரம், புங்குடுதீவு) 24. சிவகுரு குகனேந்திரன் (சின்னப்பா வீதி, நவாலி வடக்கு) 25. சுந்தசாமி - சிவகுமார் (நரசிங்கர் வைரவர் கோவிலடி, காங்கேசன்துறை) 26. சணபதி-சிவசுப்பிரமணியம் (அந்திரான், சரணவாய் தெற்கு) 27. பூபாலன்-தேவராசா (வீமன்காமம்கொலனி, தெல்லிப்பழை)

28. நகேஸ் - தவச்செல்வம் (ஐயனார் கோவிலடி, அராலி தெற்கு, அராலி) 29. நாகன் தங்கராசா (கள்ளிநகர், கைதடி) 30. கனகசபை-சிவகுமார் (4ஆம் வட்டாரம், புத்தூர், மணற்பகுதி).

31. கணபதி ஜெயக்குமார், (சுழிபுரம், குமாரபுரம், மூளாய்), 32. வேலாயுதம்-பாலகிருஷ்ணன் (கட்டுடை, மானிப்பாய்), 33. பொன்னுத்துரை - ரைதில் ஜோன்சன் (குளமங்கால், மல்லாகம்), 34. சுல்தான்—அப்துல் காதர் - நோவுதாத் (46ஜின்னாவீதி, யாழ்.), 35. குட்டாம்பிள்ளை- ரவீந்திரன் (கணேஷ் பேக்கரி, நல்லூர் மார்க்கட்), 36. செல்லையா உதயகுமார் (சுபாம்பத்தை வைரவர் கோவிலடி தெல்லிப்பளை), 37. செல்வன் இராசையா (கைதடி மேற்கு), 38. விசுவலிங்கம் விக்கினேஸ்வரன் (வட்டுகிழக்கு, துணைவி), 39. ஜோசப் அல்பேட் மகரநாயகம் (கிறிஸ்தவ நகர் பலாலி வடக்கு), 50. வேலாயுதம்பிள்ளை சண்முக பகவான் (கச்சாய்வீதி, கொடிகாமம்).

41. பாலகிருஷ்ணன் சிவசாமி (கைதடி நுணாவில், கிராஞ்சி ஒழுங்கை, யாழ்ப்பாணம்), 42. சிங்காரவேல் சிறீகுமாரவேல் (777 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்), 43. செல்லத்துரை சக்திவேல் (மிருசுவில் சாவகச்சேரி), 44. சிவப்பிரகாசம் கருணாநிதி (மூளைக்காடு கொக்கட்டிச் சோலை), 45. இராசையா விஜயன் (கலாசாலை வீதி, திருநெல்வேலி), 46. நாகலிங்கம் சற்குணலிங்கம் (கனகம் புளியடி சரசாலை, 47. வினாசி செல்வமோகன் (வெள்ளாம் போக்கடி கொடிகாமம்), 48. இராசரத்தினம் ஜெயக்குமார் (2ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறை), 49. சிவராசா சிவரூபன் (கல்லாரை மல்லாகம்)50. சேனாதிராசா சண்முகவடிவேல் (கைதடி மேற்கு).

51, கந்தையா இராசேந்திரம் (6/1 மீனாட்சி அம்மன் கோவிலடி யாழ்ப்பாணம்), 52, தம்பிராசா செல்வசேகரம் (R. C. பாடசாலைவீதி கோப்பாய்) 53. அப்புத்துரை தங்கராசா (சரவணை கிழக்கு), 54. தம்பித்துரை இராசசீலன் (சாளியப்பிட்டி அரியாலை), 55. சண்முகம் ரங்கநாதன் (மயிலணி வடக்கு சுன்னாகம்) 56. பாவிலு மரியானந்தராசா நல்லாபன்வீதிஇளவாலை,57, துரைசிங்கம் சேகதீஸ்வரன் (பண்ணாகம், சுழிபுரம்) 58. வேலுப்பிள்ளை திரவியநாதன் (திகிரி புலோலி கிழக்கு),59. அந்தோனிப்பிள்ளை வென்ஸ் கருணரட்ணம் வலித்தூண்டல் கீரிமலை, 60. தாமோதரம் பிள்ளை குணாளன் (மாதகல்துறை, மாதகல்).

61. செல்வத்துரை அழகராசா (மயிலிட்டி) 62. தேவசகாயம் அன்ரனி சுதாகரன் (பருத்தி த்துறை வி தி தையிட்டி) 63. சிங்காரவேல் சிவஞானசுந்தரம், (6.ம் வட்டாரம் மயிலிட்டி) 64. தோமஸ் அன்ரனி சேவியர் (விமன் காமம் கொலனி காங்கேசன் துறை) 65. பரிபூரணநாதன் உலகராசா (சேந்தான்குளம் இளவாலை வடக்கு) 66. மாணிக்கவாசகர் மணிவண்ணன் (கட்டுவன் றோட் மயிலிட்டி) 67. முத்தன் இராசேந்திரன் (அம்மன்வீதி தையிட்டி) 68. நாகமணி குணம் ஆவலை தையிட்டி) 69. சவரிமுத்து ஆரோக்கியநாதன் (உதயபுரம் பலாலி வடக்கு) 70. பீற்றர் மதுரநாயகம் (பலாலி வடக்கு)

71. தேவசகாயம் அருள்தாஸ் ஆரோக்கியநாதன். (மண்டைதீவு தெற்கு, கடற்கரை 72. ஆவாரம்பிள்ளை மரியதாஸ் (பலாலி வடக்கு) 73. சின்னையா ராஜேஸ்வரன் (மூன்றாம் வாய்க்கால் முத்தையா கமம் கிளிநொச்சி), 74. இராசையா ஜோதீஸ்வரன் (பள்ளிக்கூடத்தடி இருபாலை 75. சூசைப்பிள்ளை அன்ரன் (2ம் வட்டாரம் புங்குடுதீவு) 76. வீரசிங்கம் சண்முகதாசன் (6ம் வட்டாரம் புங்குடுதீவு) 77. நாகமணி செல்வராஜா (58, கனகரட்ணம் வீதி, அரியாலை) 78. கிருஸ்ணன் சுகுமார் (செட்டியஊர், தொண்டமானாறு) 79. மாணிக்கம் தவபாலன் (5ம் வட்டாரம் புங்குடுதீவு) 80. வேலு இராஜ்குமார் (புதிய கொலனி திருநெல்வேலி)

81. செல்வராஜ் செல்வகுமார் (122, கிராம விஸ்தரிப்பு திட்டம் திருநெல்வேலி) 82. தினேஷ் ஆனந்தராஜா (டச்சுறோட் சாவகச்சேரி) 83. வீரசிங்கம் திருநாவுக்கரசு (இலகடி கோப்பாய் வடக்கு) 84. கந்தசாமி பஞ்சலிங்கம் (தம்பகாமம் பளை) 85. நடராசா ஆனந்தராஜா (கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை) 86. சின்னத்துரை விமலேந்திரராசா (டச்சு றோட் கோப்பாய் தெற்கு 87. குணபாலசிங்கம் சுரேஸ்குமார் (1ம் வட்டாரம், மண்டைதீவு) 88. செல்வத்துரை தவராசா (மந்துவில் கொடிகாமம்) 89. சின்னத்தம்பி உருத்திரன் (சூசையப்பர் கோயிலடி கோப்பாய் வடக்கு) 90. வேலாயுதம் சிறிகாந் (வி. எச். லேன், இருபாலை)

91. செல்வநாயகம் சாள்ஸ் நைல்ஸ் (பழைய தபால்கந்தோர் ஒழுங்கை மாதகல்)

92. அல்விஹெட் டெஸ்மன் (பாலகட்டை றோட், சில்லாலை) 93. நாகமுத்து சிவராசா (சரசாலை தெற்கு) 94. காளிமுத்து செல்வராசா (தலைமன்னார் ரயில் நிலையம் மன்னார்) 95. குணரட்ணம் கணேசலிங்கம் (கோணாவில் ஒழுங்கை கொக்குவில்) 96. ராஜப்பு அன்டன் யூட் (8 ஆம் நம்பர் வசந்தபுரம் கொழும்புத்துறை) 97. இராசரத்தினம் தனபாலன் (ஆஸ்பத்திரி வீதி பண்டத்தரிப்பு) 98. செல்லத்துரை செல்வசிறீ (முடவேம்படி சுன்னாகம்) 99. மாரிமுத்து புலேந்திரம் (அராலி தெற்கு) 100. சிறீதரன் சுகுமார் (இராசவீதி கல்வியங்காடு) 101. ஜோசப் ஜெயக்குமார் (செல்வா வீதி நாரந்தனை கிழக்கு) 102. சுந்தரம் ஜெயக்குமார் (வீரபத்திரர் கோவிலடி கோப்பாய் தெற்கு) 103. கனகசபை காண்டீபன் தனங்கிளப்பு சாவகச்சேரி) 104. ஐயாத்தம்பி முருகானந்தமூர்த்தி (இலந்தைவட்டி வீதி அளவெட்டி தெற்கு) 105. கந்தையா செல்வராசா (ஊரெழு மேற்கு சுன்னாகம்) 106. பசுபதி உதயகுமார் (ஊரெழு மேற்கு சுன்னாகம்) 107. சின்னத்துரை நிமலரூபன் (215/9 இராசாவின் தோட்டம் யாழ்) 108. சின்னையா மதிகரன் (அப்புத்துரை கடையடி அளவெட்டி)

## மரண அறிவித்தல்கள்

### திருவாளர் முருகேசு சோமசுந்தரம் சண்முகராசா

(புளியங்கூடல், வேலணை ப. நோ. கூ. சங்கங்களின் முன்னாள் பொதுமுகாமையாளர்)

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நாரந்தனையை வசிப்பிடமாகக் கொண்டவரும் எழுபங்க நாச்சியாரின் அன்புக்கணவரும் இராசபூபதி, பாலகுமார், சுலோசனா, கலாதேவி, சந்திரவதனி, ஆனந்தன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், கமலநாதன், (ஆசிரியர் நானாட்டன் ம.வி.மன்னார்) புஷ்பமலர், கனீந்திரன் ஆகியோரின் அருமை மாமனாரும் கவாஸ்கர், சுபாஸ்கர், ரஜீவ்காந், ரமணகாந், ரம்யா ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-02-1990 திங்கட்கிழமை மு.ப 10மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தானக்கிரியைக்காக நாரந்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
நாரந்தனை
(1970)

### A. V. சுப்பிரமணியம்

[முன்னாள் நிவிற்றிகலை வர்த்தகர்]

மூளாய்றோட் வட்டுகோட்டையைச் சேர்ந்த A. V சுப்பிரமணியம் 11-02 90-ல் காலமாகிவிட்டார். இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், கௌசலாதேவி, புஷ்பராணி, மங்களேஸ்வரி, சிவபாதசுந்தரம் (சலூசி), ரஞ்சினி, கலாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராஜா, காலஞ்சென்ற அரியகுட்டி (கூட்டுறவுப் பரிசோதகர்), சரவணபவன் (விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (திங்கட்கிழமை [12-02-90] பிற்பகல் 2-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

'கலாவாசம்'
மூளாய்றோட்,
வட்டுக்கோட்டை.
தகவல்: குடும்பத்தினர்
(2505)

### சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்தக் குருக்கள்

சுழிபுரம் சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்தக் குருக்கள் 11-02-90-இல் காலமாகிவிட்டார். அன்னார் சுருவில் சிவஸ்ரீ நடராஜக் குருக்கள்-யோகாம்பாள் ஆகியோரின் மகனும், பறாளை சிவஸ்ரீ நடராஜ ஐயரின் (காலஞ்சென்ற) மருமகனும் இராஜேஸ்வரி அம்மாளின் அன்புக் கணவரும் ஜெயக்குமார் (மலேசியா), வதனா, ஜெயந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், தியாகராசக் குருக்கள் (சுன்னாகம்) ஸ்ரீஹரசர்ம (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: ந. சபேசசர்மா
சுழிபுரம்.
[1975]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 2 - 1990 இல் வெளியிடப்பட்டுள்ளது.

## கருணாநிதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் வீஸா மற்றும் விமான டிக்கெட் ஏற்பாடுகள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர்களாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு பங்குபற்றும் என முன்னர் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

'தற்போதைய நிலைமை குறித்து கலைஞருடன் தொலைபேசியில் பேசியுள்ளோம். எதிர்பார்த்தபடி ஏற்பாடுகள் நடைபெற்றால் இன்று சென்னை பயணமாவோம். பேச்சுக்களை முடித்துக்கொண்டு நாளைய தினமே கொழும்பு திரும்பி, சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவோம்' — இவ்வாறு திரு. யோகி பத்திரிகைக்குத் தெரிவித்தார். (உ)

## அடையாள வேலை நிறுத்தம்

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்கீழ் இயங்கும் பனிக்கட்டிஆலை, மீன்தூள் ஆலை, சங்கு ஏற்றுமதி போன்ற பகுதிகளில் வேலைசெய்யும் அறுபதுக்கும் மேற்பட்ட ஊழியர்கள்இன்று 12ஆம் திகதி திங்கட்கிழமை வேலைநிறுத்தம் செய்யஉள்ளதாக அறிவித்துள்ளனர்.

500 ரூபாவுக்கும் குறையாத சம்பளஉயர்வுக் கோரிக்கையை முன்வைத்து அவர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வர்,

பிரஸ்தாப ஊழியர்கள் அங்கம் வகிக்கும் கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர்கள் சங்கம் இம்மாதம் 7ஆம் திகதி தலைவர் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நடத்திய நிர்வாகசபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-51)

## புலிகளுட---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளுக்கும் எமக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல் நிலை குறித்து கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்பட்டது.

எம். பிக்கள் ராஜினாமா செய்தல், ஆயுத விவகாரம், இயக்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் என்பன குறித்தும் மாநாட்டில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. விரைவில் இவற்றை தமிழ் மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவோம் — என்றார்.

எம். பிக்களின் ராஜினாமா எப்போது நடக்கும் என்று கேட்டபோது —

சகல எம். பிக்களினதும் ராஜினாமாக் கடிதங்களைப் பெற்றுவிட்டோம். இம்மாத முடிவுக்குள் எந்நேரத்திலும் ராஜினாமா நடைபெறலாம் என்று பதில் அளித்தார்.

நாளை மறுதினம் கொழும்பில் நடக்கும் சர்வகட்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக திரு. பாலகுமார் இன்று கொழும்பு செல்கிறார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இணைந்து மாநாட்டில் பங்குபற்றவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3)

## 22 விடுதலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்தியுள்ளனர்.

மரணமானோர் விவரம் வருமாறு:-

மேஜர் சுரேஷ், மேஜர் கமல், மேஜர் மதி, கப்டன் நேமி, கப்டன் அன்ரன், கப்டன் மகேஷ், கப்டன் ரகு, கப்டன் குகன்.

லெப்டினன்ட் கிருபன், லெப். கில்பேர்ட், 2 ஆவது லெப். சங்கர், 2ஆவது லெப். சாந்தன், 2 ஆவது லெப். அசோக் என்போரும்—

ஏனைய போராளிகளான வைரவன், காந்தி, விஜி, மதி, குமார், சொனி, கருணா, நவா, சுரேஷ் ஆகியோரும் ஆவர்.

## தடுப்பு முகா---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படாததால் பல பெற்றோர்கள் தினமும் தமது பிள்ளைகள் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்த்து காத்திருந்து பின்னர் ஏமாந்து செல்கின்றனர் என்றும்—

பிரசைகள் குழு உறுப்பினர்கள் இந்தியப்படை அதிகாரியிடம் நேற்றைய சந்திப்பின் போது தெரிவித்தனர்.

இதனையடுத்து இனிவரும் நாட்களில் தடுப்பு முகாமில் உள்ளோர் விடுவிக்கப்படும் போது அவர்களது பெயர் விவரங்கள் 3 நாட்களின் முன் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரசைகள் குழுவினருக்கு அறிவிக்கப்படும் என உறுதியளித்தார். (உ-9)

# தொலைபேசி கட்டணங்களை வங்கிகளில் செலுத்தலாம்

தொலைபேசி மற்றும் டெலக்ஸ் பாவனைக்கான கட்டணங்களை நாடெங்கிலும் உள்ள இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிக் கிளைகளில் இவ்வாரம் முதல் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இக்கட்டணங்களை வசூலிக்கும் திணைக்கள அலுவலகங்களுடன் அரச வங்கிகளின் கிளைகளும் மேலதிகமாக இப்பணியில் ஈடுபடும். (உ-எ)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# நிவாரண உதவி 3 கோடி ரூபா 17, 18இல் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் பெப்: 12

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் மீளக்குடியமர்தல் படியும், உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடையும் மக்கள் வங்கி மூலம் வழங்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்கண்ட உதவிகளை வழங்க மூன்று கோடி ரூபா வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதே நேரம் கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் பாதிப்புக்குள்ளான அறுபது குடும்பங்களுக்கு நிவாரணமாக பத்து லட்சம் ரூபா கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சு-3)

## மண்டேலாவுக்கு சிங் அழைப்பு

புதுடில்லி, பெப். 12

இந்தியாவுக்கு விஜயம்செய்யும்படி நெல்ஸன் மண்டேலாவுக்கு பிரதமர் வி. பி. சிங் அழைப்பு விட்டிருக்கிறார்.

இதற்கென திரு. சிங் தலைமையில் வரவேற்புக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. (உ)

## வடமராட்சியில் கலந்துரையாடல்

பருத்தித்துறை, பெப் 12

வடமராட்சி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. தீபன் தலைமையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் வடமராட்சிப்பகுதி அதிபர்கள், கல்வி அபிவிருத்தியில் ஈடுபாடுள்ளஆசிரியர் மற்றும் கல்வியாளர்களை பங்குபற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ-118)

## கலைஞர்-----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கிற்கு அரசியல் நடத்த வந்தால், நாம் அவர்களுக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க மாட்டோம்''- என்று விடுதலைப் புலிகள் தரப்பில் பதிலளிக்கப்படும் என புலிகளின் உயர் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

இதேவேளை -

கடந்த தடவை விடுதலைப் புலிகள் பிரதிநிதி குழு கலைஞரைச் சந்தித்தபோது கலைஞரிடம் பின்வரும் மூன்று விடயங்களை தெரிவித்திருந்தது.

★ தமிழ்த் தேசிய இராணுவத்திடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட வேண்டும்.

★ இந்தியப்படையினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும்.

இந்த மூன்று விடயங்கள் குறித்து கலைஞர் தமது பதிலைத் தற்போதைய சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு விளக்குவார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இதேசமயம் ஈழப்பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் வி. பி. சிங்கை அண்மையில் கலைஞர் கருணாநிதி சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்பது தெரிந்ததே, (உ)

## இளைஞன் விடுதலை

பருத்தித்துறை, பெப். 12

பருத்தித்துறையில் வெள்ளியன்று இந்திய அமைதிகாக்கும் படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவர் அடுத்தநாள் விடுதலை செய்யப்பட்டார். பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் முறையீட்டை அடுத்தேஅவர் விடுவிக்கப்பட்டார். (உ-118)

## பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படா

கொழும்பு, பெப் 12

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப்படை இருக்கும் இடங்களில் பொலீஸ் நிலையங்களைத் திறப்பதில்லை என்று ஜனாதிபதி பிரேமதாஸா முடிவு செய்திருக்கிறார்.

இலங்கைப் பொலீஸாருக்கு ஆத்திரமூட்டும் விதத்தில் அமைதிப்படையினர் நடந்து கொள்வதைத் தடுக்கும் விதத்தில் இந்த முடிவை ஜனாதிபதி எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## அரச அதிபர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், பெப். 12

புனரமைப்பு வேலைகள் தொடர்பாக அரசாங்க அதிபர்களுக்கான மாநாடு ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

## மண்டேலா---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாக இருந்ததாக பி. பி. சி. தனது உலக சேவையில் அறிவித்தது.

நேற்று முழுவதும் பி.பி.சி. தனது செய்திச் சேவையில் மண்டேலாவின் புகழ்பெற்ற பேச்சுக்களை ஒலிபரப்பியது.

இலங்கை நேரப்படி நேற்று மாலை 6-30 மணிக்கு மண்டேலாவை விடுதலை செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் ஒரு மணித்தியாலம் தாமதமாக நெல்ஸன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டார்.

(மற்றும் செய்திகள் 5ஆம் பக்கத்தில்)

## காங்கேசன்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு பொலீஸ் பாதுகாப்பு இல்லாமையால் கொடுக்கல் வாங்கல் நடைபெறவில்லை என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே நேரம் சுன்னாகம், மானிப்பாய் வங்கி வாடிக்கையாளர்களை காங்கேசன்துறைக் கிளைக்கும், சாவகச்சேரி, பருத்தித்துறை, நெல்லியடி வங்கி வாடிக்கையாளர்களை யாழ் பிரதான கிளைக்கும் செல்லுமாறு கோரப்பட்டுள்ளது.

(க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org